[2013 மார்ச் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

56—

ஆட்டுப் பண்ணை

*__17428—திரு. ஆர்.பி. உதயகுமார்:__

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதி, சாத்தூர்—இருக்கன்குடி சாலையிலுள்ள ஆட்டுப் பண்ணையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலம், மக்களுக்கு மட்டுமல்ல, கால்நடைகளுக்கும் பொற்காலம்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நிரூபிக்கின்ற வகையிலே, உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற ஆட்டுப் பண்ணையை மேம்படுத்த ரூ.83.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையின்மூலம் தற்போது 5 போர்வெல்கள்—ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், இந்தப் பண்ணையைச் சுற்றிலும் வேலி அமைத்தும், சாலைகள் அமைத்தும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள ஆடுகளை நன்கு பராமரிக்கின்ற வகையிலே, புதிய ஆட்டுக் கொட்டகைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்ல, தீவன அபிவிருத்திக்காக சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பிலே அங்கே தீவனம் பயிரிடப்பட்டு, அங்கேயிருக்கின்ற ஆடுகள் செம்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

2013 மார்ச் 25]

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பொருளாதாரத்தை முன்னேற்றுகின்ற வகையிலே, நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்குகின்ற, இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் இதுவரை 24 ஆயிரம் கறவைப் பசுக்களும், 10 இலட்சம் ஆடுகளும் இரண்டு ஆண்டுகளாக வழங்கப்பட்டு, இந்த நிதியாண்டிலே 12 ஆயிரம் கறவைப் பசுக்களும், 6 இலட்சம் ஆடுகளும் ரூ.250 கோடி நிதி ஒதுக்கீட்டிலே வழங்குகின்ற புரட்சிகர ஆணையை வழங்கி, இதுவரை இல்லாத அளவிலே, பால் உற்பத்தியைப் பெருக்கி, இரண்டாவது வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்ற வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, சாத்தூர் தொகுதிக்குட்பட்ட சாத்தூர் ஒன்றியத்திலே, சாத்தூர்—இருக்கன்குடி நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்ற ஆட்டுப் பண்ணையை மேம்படுத்த வேண்டுமென்று கேள்வி வைத்து, அது இந்த மாமன்றத்தில் வருவதற்கு முன்பாகவே கருணை உள்ளம் கொண்டு நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சாத்தூர் தொகுதி மக்களின் சார்பாக கோடானு கோடி நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

57—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***3751—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

TRUTH ALONE TRIUMPHS